[1990 ஏப்ரல் 16

9–30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: தலைவர் அவர்களே, ஒரே நாளில் தெரு ஓரத்திலே நிறுத்தியது யார் என்பதைப் பற்றி இப்போது நான் விளக்க விரும்பவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரை அனுதாபத்தோடு கவனிக்கும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராம நிர்வாக அலுவலர்களாகப் பணி யாற்றிக் கொண்டிருப்பவர்கள், பொதுமக்கள் ஏதாவது சான்றிதழ் அல்லது கோரிக்கை வைக்கச் சென்றாலும், அவர்களுக்கு எளிதாக அதை வழங்குவது இல்லை. அதைப்போலவே பொது மக்களிடத்திலே முறைகேடாகவும், அவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்யாமலும் இருக்கிறார்கள். அத்தகைய கிராம நிர்வாக அலுவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : நிலைமைகளைத் தெரிந்து, கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய கிராம அதிகாரிகளுக்கு ஏற்கெனவே கருணைத் தொகை–'கிராஜுவிட்டி'–கொடுக்கப்பட்டு விட்டது. பென்ஷன் கொடுக்கும் திட்டம் இல்லை. புதிய கிராம நிர்வாக அலுவலர்கள் முழு நேர அரசு ஊழியர்கள். அவர்களுக்கு பென்ஷன் நிச்சயமாகக் கிடைக்கும்.

போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 3025 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்துக்காக பணிமனை கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் அரவக்குறிச்சியில் இருந்து தற்சமயம் நான்கு நகர்ப்புற பேருந்துகளை மட்டுமே இயக்கி வருகிறது. அரவக்குறிச்சியிலிருந்து நகர்ப்புற பேருந்துகளின் இயக்கமும், வழித் தடங்களும் அதிகரித்த பின்பே பணிமனை கட்டுவது பற்றி ஆராயக்கூடும்.